பதிவஞ்சல் ஒப்புகையுடன்:

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர், சென்னை-106 அவர்களின் செயல்முறை ஆணை.

முன்னிலை திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப.,

ந.க.எண்: 9625/நி2/3/2016

நாள்: 20.12.2016.

பொருள்: நிர்வாகம் - இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை, சென்னை - 106 - திருமதி. பூ. மதுரை மீனாட்சி, தட்டச்சர் அரசு சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை – 106 – பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை: 1.செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்: 5904/PSD-F/ 2014, நாள்: 03.09.2014.

2.சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குனர் அவர்களின் கடித எண்: 56491/நி2/2/2014, நாள்: 10.09.2014.

3.இவ்வாணையரக பணி நியமனம் மற்றும் பணியமர்த்தல் ஆணை ந.க.எண்: 10631/நி2/3/2014, நாள்: 23.09.2014

*****

**ஆணை:**

பார்வை 1-ல் கண்டுள்ள கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தட்டச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை 2-ல் கண்டுள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குனர் அவர்களின் கடிதத்தின்படி இத்துறைக்கு விடுவிக்கப்பட்டு பார்வை (3)-ல் கண்டுள்ள இவ்வாணையரக பணி நியமனம் மற்றும் பணியமர்த்தல் ஆணையின்படி திருமதி. பூ. மதுரை மீனாட்சி, என்பவர் அரசு சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை – 106-ல் தட்டச்சர் பணியிடத்தில் 29.09.2014 முற்பகல் பணியில் இணைந்தார்.

2. பார்வை (1) மற்றும் (2)-ல் கண்டுள்ள ஆணையின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தட்டச்சர்களின் பணியினை அவர்கள் பணியில் இணைந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யலாம் என அறிவுரை பெறப்பட்டுள்ளதால், திருமதி. பூ. மதுரை மீனாட்சி, தட்டச்சர் பணியில் இணைந்த நாளான 29.09.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

3. மேலும், பார்வை 1-ல் கண்டுள்ள சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், செயலாளரின் கடிதத்தின்படி " 2013-2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-IV தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தட்டச்சர்களின் பணிவரன்முறையானது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில்

9.3.22

MEDICAL OFFICER
GOVT. HOSPITAL

இத்தேர்வு தொடர்பாக நிலுவையிலுள்ள வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டது" எனத் தெரிவிக்கப்படுகிறது.

4.எனவே, அரசு சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை – 106-ல் தட்டச்சராக பணிபுரியும் திருமதி.பூ. மதுரை மீனாட்சி என்பவரின் பணியானது தனியர் அரசுப் பணியில் சேர்ந்த நாளான 29.09.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு, தனியர் தகுதிகாண் பருவத்தில் அமர்த்தப்படுகிறார். மேலும் நடைமுறையிலுள்ள பணி விதிகளின்படி தனியர் தனது தகுதிகாண் பருவமான இரண்டு வருட பணிக்காலத்தைத் தொடர்ந்து மூன்று வருடகாலத்திற்குள் முடித்திட வேண்டுமெனவும், தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ்நாடு மருத்துவ விதித்தொகுப்பு நூல் தேர்வு, மற்றும் கணிப்பொறியியல் அலுவலக தானியங்கி (Computer on Office Automation) தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

**இணைப்பு** : பணிப்பதிவேடு ஒரு பவுண்டு

மோகன் பியாரே
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர்

பெறுநர்
திருமதி. பூ. மதுரை மீனாட்சி,
தட்டச்சர்,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி,
சென்னை – 106

} உரிய வழிமுறையாக

நகல்:

1.முதல்வர்,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை – 106.
(திருமதி. பூ. மதுரை மீனாட்சி, தட்டச்சர் என்பவரின் பணிப்பதிவேடு (1 பவுண்டு) இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிவரன்முறை தொடர்பான பதிவுகளை தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளுமாறும் மற்றும் பணிப்பதிவேட்டினை, பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகையினை இவ்வாணையரகத்திற்கு உடன் அனுப்புமாறும் முதல்வர், அரசு சித்த மருத்துவ கல்லூரி சென்னை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

2.இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை,
சென்னை – 6.

3.கருவூல அலுவலர்/பட்டியல் பிரிவு.

4.தனியரின் பணிப்பதிவேடு

5.முக்கிய ஆணைத் தொகுப்பு

Endt.no.2370/ஏ/2014

உண்மைநகல்/அனுப்பப்படுகிறது

துணை இயக்குநர்(நி)

PRINCIPAL
GOVT. SIDDHA MEDICAL COLLEGE

MEDICAL OFFICER